REGD. No. M. 6311

'PHONE No. 55630

தனி இதழ்
ஒரு அணு
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 165

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்.. அண்ணாதுரை

"THE NAM NADU" A TAMIL DAILY: THE OFFICIAL ORGAN OF: THE D.P.F

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)

ஆண்டு	ரூ. 24—0—0
6 மாதம்	ரூ. 12—0—0
3 மாதம்	ரூ. 6—0—0
வெளிநாடு:	
ஆண்டு	ரூ. 30—0—0
6 மாதம்	ரூ. 15—0—0
3 மாதம்	ரூ. 7—8—0

சென்னை: மார்கழி 8உ புதன் (23—12—53) ★ ★ ★ வெளியூர்: மார்கழி 9உ வியாழன் (24—12—53)

'பிற மொழி கலப்பால் தமிழ் அழியும்'

—(:)—

'வேதாரண்யம்' நுழைவால் - - திருமறைக்காடு தொலைந்தது'

'தமிழ் மொழி வேர் சொற்களைக் கொண்டு இயங்குவது!'

தமிழ் ஆட்சி மொழி மாநாட்டில் நெடுஞ்செழியன் கருத்துரை

சென்னை, டிச. 23—

"தேம்ஸ் நதிக்கரையில் ஆங்கிலேயர் மீன் பிடித்து வாழ்ந்த நாளில் நாம் நாகரீகத்தோடு வாழ்ந்தோம்; அவர்கள் காட்டுமிராண்டிகளாய் காலங்கழித்த நாட்களில், நாம் அரசியலில் பங்கு பெற்றிருந்தோம்; ஆனால், தமிழகம் இன்று இருட்டறையாக இருக்கிறது. அதில் ஒரு மூலையில்தான் திருக்குறளும், சங்க இலக்கியங்களும் கிடக்கின்றன."

"அண்ணனால் அழைக்கப்படும்போது தம்பியாக, தம்பியால் அழைக்கப்படும்போது அண்ணனாக, தந்தையால் அழைக்கப்படும்போது மகனாக, மகனால் அழைக்கப்படும்போது தந்தையாக, மொழியால் அழைக்கப்படும்போது தமிழனாக, இனத்தால் அழைக்கப்படும்போது திராவிடனாக, துணைக் கண்டத்தால் அழைக்கப்படும்போது இந்தியனாக, கண்டத்தால் அழைக்கப்படும்போது ஆசியனாக, சந்திர மண்டலம், சூரிய மண்டலம் கண்டுபிடித்தபின் உலகத்தவனாக நாம் இருக்கிறோம். இன்று, மொழியின் அடிப்படையிலே, தமிழராக ஒன்று சேர்ந்திருக்கிறோம். ஆகவே, தமிழ் ஆட்சி மொழியாக வேண்டுமென்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடிருக்க வழியில்லை."

"முதலில், தமிழர்கள், 'முகத்தல் அளவை'க்காக மூங்கிலின் இரு கணுக்களுக்கு இடையே வெட்டி, அதை, 'படி' என்று அழைத்தார்கள்; அதையே குறுக்கே இரண்டாகப் பிளந்து, எட்டுச் சுவடியின் மேலுறைக்குப் பயன்படுத்தி, அதையும், 'படி' என்று அழைத்தார்கள்; அந்தச் சுவடியை விரித்துப் படிப்பதற்கும் 'படி' என்று சொன்னார்கள்; ஏறிப்போகிற படிக்கட்டுகளிலும் மூங்கிலைப் பிளந்து பரப்பி; அதையும் 'படி' என்று கூறினார்கள்—இவ்வாறு பல பொருளுக்குப் பயன்படும் இயற்கையோடு இயைந்து 'வேர்ச் சொற்களை' உடைய உயர்தனிச் செம்மொழி தமிழ் மொழியேயாகும்.

—இவ்வாறு, 20—12—53-ல், சென்னை அண்ணாமலை மன்றத்தில் தோழர் ஆ. கசபதி, எம். எல். சி. அவர்கள் தலைமையில் நடைபெற்ற ஆட்சி மொழி மாநாட்டில், இரா. நெடுஞ்செழியன் கூறினார்.

"அரசியலையும், சமுதாயத்தையும், பொருளாதாரத்தையும் வேறு வேறு கோணங்களிலிருந்து பார்ப்பவர்களும், வேறு வேறு கட்சியினரும் இங்கு ஒன்று திரண்டிருப்பதைக் காண நான் பெருமைப்படுகிறேன்.

"தமிழ், ஆட்சி மொழியாக வேண்டுமென்பது நமது ஆசை. தமிழல்லாத பகுதியில், தமிழ் ஆட்சி செலுத்த வேண்டுமென்ற விருப்பு நமக்கில்லை. தாய் மொழிப் பற்று எவனுக்கு இல்லையோ, அவனுக்கு தாய்நாட்டுப் பற்றும் இராது. நம் தாய் மொழியிலே பற்று குறைந்துவிட்ட காரணத்தால்தான், நம் நாடு அடிமைப்பட நேர்ந்தது.

நிறைந்த மக்களைக் கொண்ட நாட்டினரும், இலக்கண வரம்பில்லா மொழியைக் கொண்ட நாட்டினரும், அவரவர்களின் மொழி

...யைக் கொண்டு ஆளுகின்றார்கள்; ஆனால், நாம் வீழ்த்தப்பட்டோம்; அடிமைப்படுத்தப் பட்டோம்; —இப்போது உணருகி

'உழவு மாணிக்கம்'

சென்னை, டிச 21—

இராமநாதபுரம் வட்டத்திலேயே ஒரு ஏரில், அதிக நெல் உற்பத்தி செய்த ஏ. சங்கரநாராயணத் தேவருக்கு 'உழவு மாணிக்கம்' என்ற பட்டத்தை ஆச்சாரியார் வழங்கினார்.

சங்கரநாராயணத் தேவருக்கு கவர்னர் பிரகாசா, சர்க்கார் வெகுமதியை அளித்தார்.

...றோம்—வரலாற்றைத் திரும்பிப் பார்க்கிறோம்.

"உலகிற்கு எண்ணைக் கற்றுக் கொடுத்தவர்கள் நாம் நாகரீகத்தைக் கற்றுக் கொடுத்தவர்கள் நாம்.

"உலகில் உள்ள எல்லா மொழிகளிலும் எழுத்து, பேச்சு—இவை இரண்டிலும் சக்தி பெற்றிருக்கக் கூடியதாக ஒன்றுமில்லை; அந்தப்

(4-ம் பக்கம் பார்க்க)

'எலி வளை எலிகளுக்கே' என்று கேலிபேசினோர் இன்று அதை ஒப்புகிறார்கள்!

—[o]—

'விந்தியம் வந்துசேர அவர்களுக்குக் கொஞ்சம் நாள் பிடிக்கும்'

"சைனா பஜாரிலே 'பிக்பாக்கெட்' அடித்துவிட்டுப் போகிற கேடி கந்தசாமியின் முகத்திலே, போலீசார் விளக்கடித்துப் பார்த்து, 'நீ யார்' என்றால் அவன், 'நான்தான் கேடி கந்தசாமி,' என்று சொல்லுவான்?—அதுபோலத்தான் ஆரியம் ஒரு கேடி!"

"அறிவு விளக்கின்முன், அவர்கள் நிறுத்தப்பட்டால்,—'நீதானே பட்டினத்தாரை கடலிலே போட்டாய்?' — நீதானே வடலூர் வள்ளலாருக்கு சமாதி கட்டினாய்?' - நீதானே கற்பனைக் கடவுள்களை உண்டாக்கினாய்?' — 'நீதானே நான்கு ஜாதியை ஏற்படுத்தினாய்?' — என்று கேட்பார்களே என அஞ்சி அவர்கள் ஆரியர்கள் என கூறிக்கொள்ள வெட்கப்படுகிறார்கள்—கேடி கந்தசாமியைப் போல!

"நாம் திராவிடர்கள் என்று சொல்லிக்கொள்ள வெட்கப்படவில்லை; அவர்கள் ஆரியா என்று சொல்லிக்கொள்ள வெட்கப்படுகிறார்கள்.

"முகமதலி ஜின்னா அன்று அப்படித்தான் கேட்டார் காந்தியாரை—நான், முஸ்லீம் என்று கூறிக்கொள்வதில் பெருமைப்படுகிறேன்; நீர், இந்துவென்று கூறிக்கொள்ள வெட்கப்படுகிறீர்; என்னைப், 'நான் இந்து' என்று கூறிக்கொண்டு மேசவாரும்—இந்தியாவின் தலைவர் என்ற முறையில் வேண்டாம்,' என்றார் ஜின்னா! இதை ஆணவப் பேச்சு என்றார்கள் அரசியல் சூதாடிகள்! 'இந்து' என்று கூறிக்கொள்ள காந்தியார் வெட்கப்பட்டார்; எனவே,

(3-ம் பக்கம் பார்க்க)

கல்வித் திட்டம்—மல்லிகா சாட்டை

—(:)—

திட்டத்தைத் தொலைத்துக் கட்ட வேண்டுமெனதி.மு.க.-விற்குக் கோரிக்கை

—(:)—

தேனீ மாணவச் சிறுமியின் மனமுருக்கும் செய்தி!

தேனி, டிச. 19—

"நான் தேனியில் நாடார் சரசுவதி ஆரம்பப் பாடசாலையில், நான்காம் வகுப்புப் படிக்கிறேன்; எனக்கு வயது எட்டு ஆகிறது; எனக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது அதிகப் பிரியம்; சென்ற ஆண்டு நான், எங்கள் வகுப்பில் இரண்டாவது மாணவியாகத் தேர்ச்சியடைந்தேன்; இந்த வருடம் ½ பரீட்சையில் கொஞ்சம் குறைந்த மார்க் வாங்கி தேர்ச்சி அடைந்தேன்; ஆனால், அதன்பின், மந்திரி ராசாசியின் கல்வித் திட்டம் வந்தது; என் படிப்பிற்கும், என் போன்ற மற்றப் பிள்ளைகள் படிப்பிற்கும் மிகவும் தடை ஏற்பட்டு, நாங்கள் படிப்பதற்கு மிகவும் கஷ்டப்படுகிறோம். ஆதலால், ராசாசி அவர்கள் திட்டத்தை வாபஸ் பெறச் செய்து, எங்களுக்கு முன்போல முழுநேரப் படிப்பும் கொடுத்து, எங்களை முன்னேறச் செய்ய தாங்களும், நமது கட்சித் தோழர்களும் பாடுபட வேண்டிக் கோள்கிறேன்."

—இவ்வாறு, தேனியைச் சேர்ந்த எட்டு வயதுள்ள அ. மல்லிகா என்ற சிறுமி, நமக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்தக் கடிதத்தில் உள்ளதை அப்படியே பிரசுரித்துள்ளோம்.

இரட்டைக் கொலை!

பொள்ளாச்சி, டிச 21—

பொள்ளாச்சி தாலுக்காவில் ஜமீன் பகுதியில் நடராச கவுண்டர் என்ற விவசாய சங்கத் தலைவர் காலிகளால் தாக்கப்பட்டு கொல்லப்பட்டார். அருகே தூங்கிக் கொண்டிருந்த அவர் தம்பியும் கொல்லப்பட்டார்.

'தூத்துக்குடி சதி வழக்கை வாபஸ் பெறுக'

உடுமலை நகரசபையில் தீர்மானம்

(டிரங்க் செய்தி)

உடுமலை, டிச. 22—

இன்று இங்கு கூடிய நகரசபைக் கூட்டத்தில் 'தூத்துக்குடி சதி வழக்கை' வாபஸ் வாங்கக் கோரி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தோழர் நாராயணசாமி அவர்கள் கொண்டுவந்த தீர்மானத்தைத் தோழர் மாரிமுத்து ஆதரித்தார். பின்னர் ஓட்டுக்கு விடப்பட்டதில் 3 ஓட்டுகள் அதிகம் பெற்று-தீர்மானம் நிறைவேறியது.

(விவரம் பின்னர்)

பர்மா அரிசி ஏற்றுமதி

ரங்கூன், டிச 23—

இவ்வாண்டு ஜனவரி முதல் அக்டோபர் வரை 9 17,821 டன் அரிசியை பர்மா ஏற்றுமதி செய்துள்ளது; அக்டோபரில் மட்டும் ஏற்றுமதி செய்யப்பட்ட அளவு 53,000 டன்னாகும்.

அரிசி உற்பத்தி செய்ய இலங்கை முயற்சி

கொழும்பு, டிச. 23—

இலங்கை வடமத்திய மாகாணத்தில் படாவியா ஏரித் திட்டத்தின் கீழ் 14,000 ஏகரா நிலங்களில் அரிசி உற்பத்தி செய்யப்படவிருக்கிறது. இதற்காக ஆகும் செலவு ரூ 1,48,00,000.

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்..அண்ணாதுரை

சென்னை 23—12—53 புதன்

தமிழ் ஆட்சி மொழி

சென்னை மாநிலத்திலிருந்து, ஆந்திரம், தனியாகப் பிரிந்ததும், அங்கு, ஆந்திர மொழியை ஆட்சி மொழியாகக் கொண்டதில் ஆச்சரியமொன்றுமில்லை. அதுதான் நியாயம்; ஆனவாலும் வரவேற்கத்தக்கது.

அதுபோலவே, தமிழ் மொழியும், தமிழ் மாநிலத்தில் ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்பதில், இரண்டு வித கருத்து இருக்க நியாயமில்லை. தாய் மொழி, ஆட்சி மொழியாக வேண்டும் என்பது, தமிழரானோர் அனைவரின் பிறப்புரிமையாகும்.

தமிழை, ஆட்சி மொழியாக்குவதற்காகச் சென்ற ஞாயிறன்று, சென்னை அண்ணாமலை மன்றத்தில் ஒரு மாநாடு நடைபெற்றுள்ளது. அம்மாநாட்டில், மாறுபட்ட அரசியல் கருத்தினர் பலரும், தமிழ் மொழியின் அடிப்படையில் ஒன்றுபட்டு இருந்தனர். தமிழ் ஆட்சி மொழியாவதை அனைவரும் வரவேற்று, ஆர்வத்தோடு தம்தம் ஒப்புதலைத் தந்தனர்.

மாநாட்டிற்குத் தலைமை தாங்கினவர் முன்னாள் நீதிபதியாக இருந்தவர்; திராவிடப் பெருங்குடியிற் பிறந்த முதியவராவார். தமிழ் வளர்ச்சிக்காகத் தம் வாழ்நாள் முழுதும் செலவிட்டுவரும் பல தமிழ் அறிஞர் பெருமக்களும் அங்குக் குழுமியிருந்தனர் என்று கூறுவது மிகையாகாது.

ஆனால், தாங்களும் தமிழர்கள்தான் என்று தமிழைக் கற்று, தமிழால் பிழைப்பை நடத்தி, தமிழின் தூய்மையை வேண்டுமென்றே சீரழித்துவரும் குறிப்பிடத்தகுந்த பொதுவாழ்வினர் சிலர் அங்கு இல்லாமல் இருந்ததை நம்மால் மறந்துவிட முடியவில்லை. தங்களுக்கும் தாய்மொழி தான் தமிழ் என்று அவர்கள் கூறிக்கொள்வது உண்மையோடு ஒட்டியதாக இருந்தால், அவர்களில் ஒருவர் இருவர் கூட மாநாட்டில் கலந்துகொள்ளாமல் இருக்கத் துளியும் நியாயமே இல்லை.

தமிழ் ஆட்சி மாநாட்டுப் பொறுப்பாளர்கள், குறிப்பிட்ட ஒரு வகுப்பாரில் உள்ள முக்கியமான சிலருக்கு, அழைப்பு அனுப்பாததினால்தான், அவர்கள் மாநாட்டில் கலந்துகொள்ளாமல் இருந்துவிட்டனர் என்று எவராலும் சொல்லவும் முடியாது. மாநாட்டுப் பொறுப்பாளர்கள் அத்தகுக் கடுகுள்ளம் கொண்டவர்கள் அல்லர் என்பது வெள்ளிடைமலை. நாமறிந்தவரையில், மாநாட்டுப் பொறுப்பாளர் குறிப்பிட்ட அந்தச் சிலரையும் மாநாட்டில் பங்கு கொள்ள அழைத்துத் தான் இருக்கிறார்கள். ஆனால், அந்தக் குறிப்பிட்டவர்களுக்குள்ளச் சொந்தத் தாய்மொழிப் பற்று, தமிழுக்கு ஏற்றம் தேடுவதைக் கண்டும், கேட்டும் மகிழ்வதற்கு, அவர்களுக்கு இடமளிப்பதாக இல்லை.

காலஞ்சென்ற பருதிமால் கலைஞன் போல், தமிழ்ப் பற்று, பத்திரிகைத்தொழிலிலீடுபட்டுள்ள மற்றப் பார்ப்பன மக்களுக்கும் இருந்திருக்குமானால், தமிழ் ஆட்சி மாநாட்டில் அவர்களும் பங்கு கொண்டுதான் இருப்பர் என்பதில் ஐயமில்லை.

மாநாட்டில் அவர்கள் பங்குகொள்ளாததினால், அவர்களுடைய உள்ளத்தில் மறைந்து கிடக்கும் வடமொழிக் காதல் வெட்டவெளிச்சமாகிவிட்டது. தமிழ் ஆட்சி மாநாட்டில் ஒரேபடியாக அவர்கள் கலந்துகொள்ளாததினால், தமிழ் மொழிக்கு ஒன்றும் ஆபத்து வந்துவிடப் போவதில்லை. தமிழ் ஆட்சி மொழி ஆவதில் அவர்களுக்குள்ள அக்கறையும் ஆசையும் தான் அம்பலமாயிற்று. கும்பலில் கலந்துகொண்டு அவர்களும் கோவிந்தா போடாமல், மாநாட்டில் கலக்காமல் கட்டுப்பாடாக ஒதுங்கி நின்று, தங்கள் உள்ளக் கிடக்கையை தமிழ் மக்களுக்கு ஐயமற உணர்த்தியதற்காக, தமிழர்கள் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறார்கள்.

நாயனக்காரர் ஒருவர் சைவ சமயத்தைச் சார்ந்தவர்; அவர், திருமால் கோயிலில், விசேஷ காலங்களில் நாயனம் வாசிக்க ஒப்பந்தம் செய்து கொண்டார். அவர் சார்ந்துள்ள சமய ஆசாரப்படி தனது நெற்றியில் திருநீறும், தொழில் செய்யும் இடத்திற்கேற்றபடி வயிற்றில் திருமண்ணும் இட்டுக்கொண்டு திருமால் கோயிலுக்குச் சென்றார். இந்த விசித்திரத் திருக்கோலத்தின் விவரம் கேட்டனர் சிலர். நாயனக்காரர் கூறினார்: "நெற்றியிலிருக்கும் சிவச் சின்னம் குலாசாரம்; வயிற்றிலிருக்கும் திருமண் வயிற்றுக்காரம்,"—என்று! இந்த நாயனக்காரரைப் போலத்தான் பார்ப்பன குடிமக்கள் தமிழை வேண்டா வெறுப்பாகக் கட்டி அழுகிறார்கள் என்பதை ஒவ்வொருவரும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். நிற்க,

இலக்கியம், இலக்கணம், மற்றும் நுண்கலை ஆகிய ஒரு துறையிலும் குறிப்பிடத்தகுந்த வளம் பெறாத காட்டு மொழியான இந்திக்கு ஒரு பெரிய இந்தியத் துணைக் கண்டத்தின் ஆட்சி மொழியாக இயங்குவதற்கு அருகதை இருக்கிறது என்றால், எல்லாச் சிறப்புகளும் ஏற்கனவே பெற்று விளங்கும் தமிழ் மொழிக்கு, குறிப்பிட்ட ஒரு மாநிலத்தின் ஆட்சிமொழியாக ஆவதற்கு ஆற்றல் கிடையாது என்று எவரும் சொல்ல முன்வரமாட்டார்கள். வட மொழியைத் தாய் மொழி எனக் கொண்டிருக்கிற பார்ப்பன மக்களின் ஏடுகளே தமிழ் ஆட்சிமொழி ஆவதை விரும்பியோ—விரும்பாமலோ—வரவேற்கின்றன என்றால், தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட நாம், வரவேற்கிறோம் என்று சொல்லவும் வேண்டுமோ?

மாநாட்டின் தலைவர் முதியவர் கஜபதி அவர்கள், இந்திய அரசியல் சட்டத்தின் மொழிப் பிரிவுகளைக் கொண்டு, தமிழை உடனடியாக ஆட்சி மொழியாக்க வேண்டும் என்று வழக்காடி இருக்கிறார். அரசியல் சட்டப் பிரிவுதான், தமிழை ஆட்சி மொழியாக்குவதற்கான செயலை இப்பொழுதே மேற்கொள்ளுமாறு நம்மைத் தூண்டுகிறது என்பதைத் தலைவர் விளக்கியிருக்கிறார். எனவே, அவர், சென்னை மேல் சபையில் கொண்டு வந்திருக்கிற தமிழ் ஆட்சி மொழித் தீர்மானத்துக்குத் தமிழ் உறுப்பினர் அனைவரின் இதயபூர்வமான ஆதரவும் இருக்குமென்பதில் ஐயமில்லை. முயற்சி வெற்றி பெற நாம் பெரிதும் விழைகிறோம்.

மாநாட்டில் கலந்துகொண்ட நமது தி. மு. கழகத் துணைச் செயலாளர் வலியுறுத்திக் கூறியுள்ளதுபோல, பொதுவாகப் பிறமொழிக் கலப்புக்கு, அதிலும் குறிப்பாக வடமொழிக் கலப்புக்கு, இடங் கொடுக்காமல், தமிழில் பல பொருள் பட நூற்கள் வெளியிடப் பெற்றாக வேண்டும்.

அதற்கும், தமிழ்க் குடிபிறந்த தமிழறிஞர்கள் குழு ஒன்று நிறுவப்பட வேண்டும். அப்பொழுதுதான்; தமிழ் ஆட்சிமொழி யாவதோடு, தமிழின் தனித்தன்மை கெடாமல், தமிழ், இனிமைத் தமிழாகவே வளர்ந்தோங்கும். இல்லையானால், தமிழ் 'அனுசிருஷ்டி', 'அனுவிருஷ்டி', 'திரால்ஙிப்பு', 'கஜகர்ப்பம்' என்ற அவியல் தன்மை பெற்று, மெள்ள மெள்ளச் சாகும் நிலை எய்தும் என்று எச்சரிக்கிறோம்.

'சி. ஆர். விலகுவதே சிறந்தது!'

குண்டூரில் பிரகாசம்

கூட்டத்தில் கல்வீச்சு

குண்டூர், டிச. 22—

ஆந்திர மாநில முதன் மந்திரி டி. பிரகாசம் தமது சுற்றுப் பயணத்தை யொட்டி நேற்றிரவு விஜயவாடாவிலிருந்து இங்கு வந்து சேர்ந்தார். பிரமுகர் பலரைச் சந்தித்துப் பேசியபின், மாலை 10-30 மணிக்கு பொதுக் கூட்டம் தொடங்கியது.

பிரகாசம் மேடைக்கு வந்த பின் அவர்மீது கூட்டத்தார் கற்களை வீசினர்.

சற்று மௌனமாக இருந்துவிட்டு, பிரகாசம் பிறகு பேச ஆரம்பித்தார். அவர் பேசும் போது, 'காங்கிரஸ் சில நல்ல காரியங்களைச் செய்து வருகிறது' என்றார். கூட்டத்தில் ஒருவர் எழுந்து, 'மந்திரி பதவி தந்து விட்டால் காங்கிரஸ் நல்லது; இல்லாவிடில் மோசமானது; அப்படித்தானே!' என்றார்.

பிரகாசம் அவரை மேடைக்கு அழைத்து சமாதானப் படுத்தினார்.

தலைவர் பற்றி மற்றொரு கேள்விக்குப் பிரகாசம் பதிலளிக்கையில், 'அந்தப் பிரச்சினை, சட்டசபை முடிவைப் பொறுத்தது,' என்றார்.

பிரதமர் நேருவுக்குப் பிரகாசா தகவல்

சென்னை, டிச. 23—

சென்னை மாநிலத்தின் அரசியல் நிலை குறித்து, பிரதமர் நேருவுக்கு, கவர்னர் பிரகாசா ஒரு கடிதம் எழுதியிருப்பதாக நம்பகமாகத் தெரிய வருகிறது.

அந்தக் கடிதத்தில், ஆச்சாரியாருக்கு மெஜாரிடி பலமில்லையென்றும், ஆகவே, ஆச்சாரியார் விலகிக்கொள்வது நலமென்றும் குறிப்பிட்டிருக்கிறாராம்.

இதுபற்றி அறிந்த ஆச்சாரியார், 'கவர்னர் என்னைக் கேட்டிருக்கக் கூடாதா?' என வருந்தியதாகவும், அதற்குக் கவர்னர், 'என் கருத்தை எழுத எப்படி அவரைக் கலக்க முடியும்?' என்று சொன்னதாகவும் அரசியல் வட்டாரங்களில் பேசிக் கொள்ளப்படுகிறது.

27-ம் தேதி நடைபெறும் கட்சிக் கூட்டத்தில், முடிவு தெரிந்துவிடுமென அனைவரும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

மாநிலங்களை மாற்றி — அமைக்கும் திட்டம்!

வரலாறுகொண்டு ஆராய மூவர் கொண்ட குழு நியமனம்

புதுடில்லி, டிச. 22—

மாநிலங்களை மாற்றி அமைப்பது பற்றி விசாரணை நடத்துவதற்கான குழுவின் உறுப்பினர்களை பிரதமர் நேரு இன்று மக்கள் சபையில் அறிவித்தார். ஒரிசா கவர்னர் சையத் பசல அலி (தலைவர்) அரசாங்க சபை உறுப்பினர் எச். என். குன்ஸ்ரு, ஜே.எம். பனிக்கர் ஆகியோர் குழுவின் அங்கத்தினர்கள்.

1955 ஜூன் மாதத்திற்குள் அறிக்கையை சமர்ப்பித்துவிட வேண்டுமென அக்குழுவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்தக் குழுவிற்கு மாநிலங்களை மாற்றியமைப்பது சம்பந்தமாக, எத்திட்டத்தையும் ஆராயலாம் என்ற உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது.

குறிப்பாக வரலாற்றுச் சான்றுகளை முன் வைத்தே; அந்தக் குழு, நிலைமைகளை பரிசீலிக்குமெனச் சொல்லப்படுகிறது.

தங்களால் இயன்ற அளவில் விரைவாக அறிக்கையைச் சமர்ப்பிக்கும்படி குழுவைக் கேட்டுக்கொள்ளப் பட்டிருக்கிறது.

குழுவிற்கு ஒரு செயலாளரும் தேவையான மற்றச் சிப்பந்திகளும் சேர்த்துக்கொள்ளப்படுகிறது.

சத்தியமாய் நான் போகேன்!

பூரண கும்பம் பூப்போன்ற தாம்பூலம்
ஆரமுடன் சந்தனம் அத்தனையும் தந்தென்னை
வாவென்று சொன்னவுடன் வந்திட்டேன் மந்திரியாய்!
போவென்று சொன்னால்நான் போவேனோ? சொல்லுங்கள்!

தள்ளாத வயதுற்ற தளர்ச்சிதனை எண்ணாமல்
உள்ளம் மகிழ்வடைய உமைகாக்க நான்வந்தேன்!
பள்ளம் குழிவிழ்ந்து பரிதவிக்கும் மக்கள்தமை
மெள்ளக் கைகொடுத்து மேடேற்ற நான்வந்தேன்!

பெருந்தலைகள் எல்லோரும் பேசாமல் என்னருகே
இருக்கின்ற நேரத்தில் இன்றைக்கு முளைத்திட்ட
சின்ன மனிதரெலாம் சீறுகிறார் எனைக்கண்டு
என்னத்தைச் சொல்லுவது எல்லாம் கலிகாலம்!

ஆப்புதனைப் பிடுங்கி அதில்மாட்டிக் கொண்டதுபோல்
மூப்படைந்த நானிங்கே "முழி"க்கின்ற வேளையிலே
போங்காணும் என்கின்றார் எப்படிநான் போவதுவாம்?
சாங்காலம் ஆனாலும் சத்தியமாய் நான் போகேன்.

"உனைப்போகும் படிசொல்ல எவரிங்கே உண்"டென்று
மனக்குரங்கென் ஆர்வமெனும் மரமேறிக் கேட்கிறது!
எனைப்போகச் சொல்லிவிடின் எப்படித்தான் இந்நாடு
தனைக்காத்துக் கொள்ளுவதாம்? சத்தியமாய் நான் போகேன்.

—"விசாகன்"—'நீதி'

ரஷ்யாவுக்குப் புதிய துணைப் பிரதமர்கள்

மாஸ்கோ, டிச. 21—

ரஷ்ய சர்க்காரில் புதிதாக ஐந்து துணைப் பிரதமர்கள் நியமிக்கப்பட்டிருப்பதாக மாஸ்கோ ரேடியோ இன்று அறிவித்தது:-

(1) சபுரோவ்—அரசாங்க திட்டக் குழுத் தலைவர்.
(2) மேவுசெவ்-மின்சார இலாகா அமைச்சர்.
(3) டெவோசியன் — உலோகத் தொழில் அமைச்சர்
(4) மாலிஷேவ்—கனரக இயந்திர நிர்மாண அமைச்சர்.
(5) கோசிஜின் — நன்றுட உபயோகப் பொருட்களின் உற்பத்தி இலாகா அமைச்சர்.

அஞ்சல் சேமிப்பு நிதியில் ரூ. 200 கோடி!

இந்தியத் துணைக் கண்டத்தில் உள்ள அஞ்சல் நிலைய சேமிப்பு நிதியில் மொத்த ரூ. 200 கோடியைப் பொதுமக்கள் சேமித்து வைத்திருப்பதாகத் தெரியவருகிறது.

தைத் திருநாள் திராவிடர் திருநாள்!

தொன்மை என்று கூறி விஞ்ஞானக் கல்வியைப் புறக்கணிக்கக் கூடாது

அநீதியையும், கொடுமையையும் எதிர்த்து போரிட வேண்டும்

குடியரசு துணைத் தலைவர் விருப்பம்

மீரத், டிச. 20—

"விஞ்ஞானம், தத்துவம் முதலிய பெரிய விடயங்களில் நாம் ஊக்கம் காட்டாவிட்டால், நாம் உண்மையாகக் கல்விகற்கவில்லை என்றுதான் பொருள்"

என்று மீரத் கல்லூரி வெள்ளி விழாவில் டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் சொன்னார்.

மேலும் அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"மனித இனத்தின் முன்னேற்றத்திற்கு வேகம் தரும் விஞ்ஞானத்தையும், தொழில் நுணுக்க முறைகளையும் இழந்து விடாமல், நமது தொன்று தொட்ட கலாசாரத்தின் அடிப்படையான கருத்துக்களை நாம் பாதுகாக்க வேண்டும்" என்றார்.

"அச்சத்துடனும், பெருமையுடனும் நம் அரைப் பைத்தியங்களாகி விட்டோம்; விழிகளில்லா திருக்கிறோம்; அறுபட்ட நிலையிலுள்ளோம். வாழ்க்கை என்னும் மந்திர வித்தை மங்கி வருகிறது. வாழ்வின் உண்மையையும் காணுவது நமக்கு வர வர கடினமாகி விட்டது."

"சாவையும், நோவையும் எதிர்த்துப் போராடுவதை விட, மனிதனை மனிதன் அமிழ்த்துவதை இன்று நாம் எதிர்த்துப் போராட வேண்டும்; வாழ்வைத் துன்பக் கதையாக்கும் அநீதியையும் கொடுமையையும் எதிர்க்க வேண்டும். நம்முடைய வாழ்க்கைத் தத்துவத்தில் ஒரு புதிய உலக சமுதாயத்தை உருவாக்கும் சில அடிப்படை உரிமைகள் உள்ளன."

பிரிட்டனில் படிக்கும் இந்திய மாணவர்கள்

விடுமுறை காலங்களில் உழைத்துச் சம்பாதிக்கின்றனர்

லண்டன், டிச. 23—

பிரிட்டனில் படிக்கும் இந்திய மாணவர்கள், விடுமுறை காலங்களில் உழைத்துச் சம்பாதிக்கின்றனர். சுமார் ஏழாயிரம் மாணவர்களுக்கு இம்மாதிரி வேலை கிடைக்கிறது; இதில் எழுநூறு பேர் இந்தியர்கள்.

சமீப விடுமுறையில் வேலை கிடைத்த 90 இந்திய மாணவர்களில், பத்து பேர் ரயிலில் போர்ட்டர்களாகவும், 20 பேர் ஹோட்டல் சர்வர்களாகவும், 16 பேர் குமாஸ்தாக்களாகவும், 13 பேர் தொழிலாளர்களாகவும், 17 பேர் இதர வேலைகளிலும் ஈடுபட்டு உழைத்தனர். இதனால் வருகிற வருமானம் மாணவர்களுக்கு மிக உதவியாக இருந்து வருகிறது.

வி. கே. கிருஷ்ணமேனன், கொரியாவிற்கு, பண்டித நேருவின் விசேஷ தூதராகச் சென்று அங்குள்ள அரசியல் நிலைமையை அறிந்து, நேருவிடம் 'ரிப்போர்ட்' சமர்ப்பிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

துணைத் தேர்தலில் காங்கிரஸ் தோல்வி

மேற்கு பாஞ்சாலத்தில் பாதர் பாத் தொகுதியில் நடைபெற்ற சட்டசபை துணைத் தேர்தலில் பொது இடத்தையும் ஒதுக்கப்பட்ட இடத்தையும் காங்கிரஸ் பறிகொடுத்தது. இரண்டு இடங்களையும் பி. எஸ். பி. பிடித்துக் கொண்டது.

மணவினை—பிள்ளைக்கிரை அல்ல!

லண்டன், டிச. 23—

'மணவினை' என்பது ஒரு ஆணையும், ஒரு பெண்ணையும் வாழ்க்கை முழுவதும் சுக அக்கங்களை அனுபவிப்பதற்காகப் பிணைத்து வைப்பதாகும்; எதெற்கெடுத்தாலும், 'விவாக ரத்து' என்பதைப் பலமாக ஆட்சேபிக்கத்தான் வேண்டும் என்று தார்மிக கலைக்குழு அறிவித்துள்ளது.

18-வது வட்ட தி. மு. க. தோழர்கட்கு

சென்னை, டிச. 23—

"18-வது வட்ட, புளியந்தோப்பு, தி. மு. கழக பொது உறுப்பினர் கூட்டமும், செயற்குழுவும் 25—12—53 வெள்ளி காலை 9 மணியளவில் கழகக் கட்டிடத்தில் நடைபெறும். இதனையே அழைப்பாகக் கொண்டு, எல்லாத் தோழர்களும், மற்றும் இதுவரையில் நிதி ஒப்புவிக்காத தோழர்களும் நிதித் தாள் பணத்துடன் தவறாது வருமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்," என்று செயலாளர் தோழர் கோ. கேசவன் அறிவிக்கிறார்.

1-வது வட்ட தி. மு. கழகத் தோழர்கட்கு

"1-வது வட்ட தி. மு. கழகத்தின் ஆண்டுத் தேர்தல், 217, திருவொற்றியூர் பெரிய சாலை, (கழகக் கட்டிடத்தில்) 27—12—53 ஞாயிறு காலை பத்து மணி அளவில் நடைபெறும். இதனையே அழைப்பாகக் கொண்டு மேற்படி கழக உறுப்பினர்கள் அனைவரும் வருமாறு வேண்டுகிறேன்," என துணைச் செயலாளர் அ. கோவிந்தசாமி கேட்டுக்கொள்கிறார்.

திருவொற்றியூர் கலை வளர்ச்சி மன்றத் துவக்க விழாப் பொதுக் கூட்டம்

24—12—53 வியாழன் மாலை 6 மணிக்கு. திருவொற்றியூர். சன்னதித் தெருவில், தோழர் கணபதி தலைமையில், நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி மன்றத்தைத் திறந்துவைப்பார். தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், சு. மாசிலாமணி ஆகியோர் சொற்பொழிவாற்றுவர். அதுபோது, (திருவொற்றியூர் தி. மு. கழகச் சார்பில்) தூத்துக்குடி வழக்கு நிதிக்குப் பண முடிப்பு அளிக்கப்படும்.

எலி வளை......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் அவ்வாறு கூறவில்லை.

"ஆரியர்கள் என்று கூறிக்கொள்ள வெட்கப்படுவதின் காரணம், ஆரம்ப காலத்திலிருந்தே அவ்வளவு ஆபாசமான காரியங்களை, அவர்கள் செய்து வந்திருக்கிறார்கள்.

"அவர்கள், ஒப்புக் கொள்ள கொஞ்ச நாட்களாகும். 'தமிழ் நாடு தமிழருக்கே' என நாம் கூறிய நேரத்தில், இதே 'கல்கி'யார், 'ஆனந்த விகடனி'ல் இருந்தபோது, 'எலி வளைகள் எலிகளுக்கே' என்று எழுதினார். அவர்களே இப்போது தமிழர்கள் என ஒப்புக்கொண்டார்கள்.

"நாம் இப்போது விந்தியத்தில் நிற்கிறோம்—அவர்கள் அங்கு வந்துசேர கொஞ்ச நாள் பிடிக்கும் — உள்ளம் அப்படி! உடற்கட்டும் கொஞ்சம் மாதிரி!"

—இவ்வாறு, 20—12—53ல், சென்னையில், தலைவர்களுக்கு தாய்மார்கள் அளித்த வரவேற்புக் கூட்டத்தில், தோழர் அண்ணாதுரை அவர்கள் கூறினார்.

அண்ணாதுரை கூறியது— ஆதித்தனர் திருத்தியது!

★

"நிச்சயம் தி. மு. கழகம் இந்த நாட்டை ஆளத்தான் போகிறது; ஆளப்போகிற நேரமுதல், அண்ணாதுரை முதலமைச்சராகவோ, மதியழகன் நிதி மந்திரியாகவோ அல்ல! தி. மு. கழகம் நாட்டை ஆளுகிற நேரத்திலே, காமராஜர், அதனுடன் கலந்து பணியாற்றவும் நேரிடலாம்"

—சான்றாளன்மித் நகர் பொதுக் கூட்டத்தில் பொதுச் செயலாளர் அண்ணாதுரை: 10—12—53

★

தி. மு. க. ஆட்சிக்கு வந்தால் காமராஜருக்கு முதல் மந்திரி பதவி!

—(தலைப்பு)

தி. மு. க. முதன் மந்திரி காமராஜர்!

—(துணைத் தலைப்பு)

"தி. மு. கழக ஆட்சி ஏற்படப் போவது சர்வ நிச்சயம். அச்சமயம் அந்த ஆட்சியில் காமராஜரே முதல் மந்திரியாக இருக்கலாம்." (செய்தி)

12—12—53: 'தி. தந்தி'

'தினமணி'யின் தலைப்பு விவகாரத்தில் சபாநாயகர் தீர்ப்பு

'தினமணி' மன்னிப்புக் கேட்டுக் கொண்டது சுட்டப்பட்டது

சென்னை, டிச. 22—

'தினமணி' இதழ், கோசல்ராம். பிரசங்கத்தை, 'மரணவல்லை' பிரசங்கமென்று பிரசுரிக்கப்பட்டது பற்றி கே. டி. கோசல்ராமும், பாலனேரி சாமிநாதனும் கொடுத்திருந்த உரிமைப் பிரேரணை, இன்று சென்னை அசெம்பிளியில்,கேள்வி நேரத்திற்குப் பிறகு ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

சட்டசபைத் தலைவர் அதுபற்றிக் கூறுகையில், 'இன்று, அப்பத்திரிகையில் எழுதப்பட்டுள்ள உபதலையங்கத்தைப் பார்த்தேன்; அதற்காக மகிழ்ச்சி,' என்றார்.

இன்றைய 'தினமணி'யின் துணைத் தலையங்கத்தில், மன்னிப்புக் கேட்டும், கோசல்ராமுக்கு வாழ்த்தும் கூறப்பட்டுள்ளது.

கோசல்ராம் எழுந்து 'தினமணி' பத்திரிகையில் 'கடைசிப் பேச்சு' என்றிருப்பதாயும், அது தவறு என்பதை சபாநாயகர் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புவதாயும், பத்திரிகைகள் பாரபட்சமற்ற முறையில் நடந்து கொள்ள வேண்டுமென்றும் கூறினார்.

சபாநாயகர், 'தினமணி'யின் உபதலையங்கத்தை வாசித்துக் காட்டி, 'ஆசிரியர், சபையையோ, கோசல்ராமையோ அவமதிக்கும் எண்ணத்தோடு அவ்வாறு குறிப்பிடவில்லை,' என்று சொன்னார்.

சட்டசபை திராவிடக் கட்சியின் தலைவர் எஸ். வையாபுரி பேசுகையில் கூறியதாவது:—

"'தினமணி' ஆசிரியர், தாம் எழுதியதற்கு வருத்தம் தெரிவிக்கவில்லை; அன்றைய பத்திரிகையில் வெளியானதை கோசல்ராம் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை என்பதற்கே வருத்தம் தெரிவித்துக் கொள்வதாக" எழுதியிருப்பதாகச் சொன்னார். அன்றைய சொற்பொழிவில் 'மரணவல்லை' என்ற சொல்லை அவர் உபயோகிக்கவில்லை என்றார்.

சபாநாயகர் தீர்ப்புக் கூறுகையில், 'தினமணி'யின் சமாதானத்தை ஒப்புவதாகவும், மேற்கொண்டு நடவடிக்கைக்கு இடமில்லையெனவும் சொன்னார்.

நெடுஞ்செழியன் பேச்சு

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

பெருமை தமிழுக்கே உரித்தானது. இயற்கையோடு இயைந்த மொழி தமிழ்—அதுவே, உயர் தனிச் செம்மொழி.

பிறமொழி கலப்பால் தமிழ் அழியும் - அழிந்தது. 'வேதாரணியம்' புகுந்ததால், 'திருமறைக்காடு' என்ற தமிழ்ச் சொல்லை இழந்தோம்; 'விருத்தாசலம்' என்ற சொல் புகுந்ததால், 'பழமலை' என்ற தமிழ்ச் சொல்லை இழந்தோம்.

"தமிழ் மொழி, வேர்ச் சொற்களை (Root Words) உடையது. வேர்ச் சொற்கள் அற்ற மொழிகள் கடன் வாங்கித்தான் ஆகவேண்டும்.

"முதன் முதலில், ஆகாய விமானத்தைப் பார்த்தான், தமிழன்! அது பறவைபோல் பறக்கும், கப்பலைப்போல அமைப்பிலும் இருந்ததால், அதற்கு. 'பறவைக் கப்பல்,' என்று பெயரிட்டான்.

தமிழ் மொழி, இங்கு ஆட்சி மொழியாக இருந்திருந்தால், 'சைக்கிள்' என்ற ஆங்கிலச் சொல்லையே தமிழில் புகுத்தும் நிலை ஏற்பட்டிருக்காது. ரா. பி. சேதுப்பிள்ளையையும், இ. மு. சுப்ரமணியப் பிள்ளையையும், சச்சிதானந்தர் அவர்களையும் கொண்ட குழுவை வைத்து, அறைமுகத்தில் இறக்குமதியாகும்போது, இதற்குப் பெயர் 'ஈருருளை வண்டி' என சைக்கிளுக்கு பெயரிட்டு அனுப்பி விட்டிருந்தால், சைக்கிள் என்ற சொல்லே தமிழில் புகுந்திருக்காது.

"தமிழ், தமிழ் என்று சொல்லும்போது, 'உலகத்தோடு ஒத்துப் பழக ஒரு மொழியைக் கற்றுக் கொள்' என்பதையும், நாங்கள் கூறத் தவறியதில்லை. அந்தத் தகுதி எந்த மொழிக்கு இருந்தாலும் இந்தியாக இருந்தாலும் சமஸ்கிருதமாக இருந்தாலும் நாம் ஏற்றுக்கொள்ளத் தயார். அந்தத் தகுதி தற்போது ஆங்கிலத்திற்கே உண்டு; ஆகவே ஆங்கிலமும் அவசியமாகிறது.

'இந்த மாநாடு பற்றி எனக்கு ஒரு ஐயம் எழுகிறது. புதிய கல்வித் திட்ட எதிர்ப்பின்போது, சட்டசபை உறுப்பினர்கள் தீர்மானத்தை நிறைவேற்றியபோது, 'இது, வெறும் சிபாரிசுதான்' என்று சொன்னதுபோல, ஆச்சாரியார், இந்த மொழிப்பிரச்சினையிலும் கூறினால், அதையும் மாற்ற உறுப்பினர்கள் தயாராக இருக்கவேண்டும்?"

நன்றி

"பொதுச் செயலாளர் அண்ணாதுரை உள்ளிட்ட சிறைசென்று மீண்ட தலைவர்களைத் தாய்மார்கள் பாராட்டவும், தூத்துக்குடி வழக்கு நிதிக்குப் பண முடிப்புத் தரவும் எம்முடன் ஒத்துழைத்த சோதர சோதரிகளுக்கும், தாராளமாய் பொருளுதவி செய்து உதவியவர்களுக்கும், தலைமையேற்று விழாவினை சிறப்பித்த டாக்டர் தருமாம்பாள் அவர்களுக்கும் இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்" என்று கவிஞர் தோழியர் சத்தியவாணிமுத்து அவர்களும், உடனிருந்து துணைபுரிந்த அலமேலு அப்பாதுரை, செல்வக்கண்ணம்மாள் ஆகியோர் அறிவிக்கின்றனர்.

தோழர் பாலதண்டாயுதம்

சென்னை, டிச. 21—

நெல்லை சதி வழக்கில் ஆயுள் தண்டனை பெற்ற தோழர் பாலதண்டாயுதம் மத்திய பிரதேசத்திலுள்ள நாகபுரி சிறைக்கு அனுப்பப்பட்டார். தோழர் பாலதண்டாயுதம் மிகவும் மெலிவுற்றிருக்கிறார். அவர் தனது உள்ளூர் தோளைக் கைவிட்டுவிட்டார்.

கைத்தறி துணியே நாம் அணிவோம்!

தூத்துக்குடி சதி வழக்கு நிதி வசூல்

★

முன் (18—12—53) தொடர்ச்சி	7373-11—6
புதியபுத்தூர் தி. மு. கழகம்	5—0—0
சிதம்பரம் காய்கறி விற்பனையாளர்கள், மு. கருணாநிதி அவர்கள் மூலம்	11—4—0
திருச்செங்கோடு காச்சிமுத்து	1—0—0
,, ஏ. வரதராசன்	1—0—0
திருச்சி பெரியகடை வீதி, தி. மு. கழக நூல் நிலையம்	4—0—0
சேலம்-சிக்கிப்பாளையம் எம். பாண்டியன்	2—0—0
பிள்ளாதுறை தி. மு. கழகப் பொதுக் கூட்ட வசூல்	3—8—0
தஞ்சாவூர் அரசினர் பயிற்சி (ஆசிரிய)ப் பள்ளி மாணவர்கள்	25—0—0
ராயகல்லூர் தி. மு. கழகப் பொதுக் கூட்ட வசூல்	5—1—0
விளாங்காடு வி. இளஞ்சேரன்	2—0—0
பொள்ளாச்சியில் 25—11—53ம் தேதி நடந்த வை. சுப்ரமணியம்—ராமானுசம், கே. சுப்ரமணியம்—பார்வதி ஆகியோரின் வாழ்க்கை ஒப்பந்த நினைவாக	2—0—0
கூப்பாச்சிக்கோட்டை தி மு. கழகம், உத்திரபதி	5—0—0
பாவாக்கோட்டை தி. மு. கழகம், எஸ். எஸ். காத்தமுத்து	5—0—0
தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்கள் மூலம் :—	
விருதுநகர் வா. ச ம. ரத்தினம் பிரதர்ஸ்	25—0—0
,, ஏ. கே. பி. சண்முகசுந்தர நாடார்	15—0—0
,, பொ. த. தவசி நாடார்	15—0—0
,, எம். என். நல்லதம்பி	1—0—0
பறங்கிப்பேட்டை டி. எம். கிருஷ்ணமூர்த்தி	5—0—0
,, கே. மதிவதனம்	5—0—0
,, ஜி காளிமுத்து	3—0—0
,, என். வேலாயுதம்	3—0—0
,, ஆர். நடராசன்	2—0—0
,, ஜி. வாசுதேவன்	2—0—0
,, என். சங்கரன்	2—0—0
,, ஏ. அந்தோணிசாமி	1—0—0
,, கே. வி. தங்கவேலு	1—0—0
,, எஸ். அருணாசலம்	1—0—0
,, ஆர். கங்காதரம்	1—0—0
,, ஆர். சுப்ரமணியம்	1—0—0
,, டி ஜி. சாமுவேல்	1—0—0
,, எம். குழந்தைசாமி	1—0—0
,, ஆறுமுகம், சிங்காரம், சின்னசாமி, பழனி	1—0—0
சென்னை பெத்துநாய்க்கன்பேட்டை, ஆசைத்தம்பி, ரத்தினம், நாயகம், கோவிந்தராசன் ஆகியோர்	1-12—0
சிவகாசி தீப்பெட்டி பெண்கள் தொழிலாளர் சார்பாக, கு. சீதாலட்சுமி அவர்களால் நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் அவர்கள் மூலம்	40-12—0
ஈரோடு, மதுரை, சிவகாசி, ஆகிய இடங்களில், நடிகர் எம் ஜி. ராமச்சந்திரன் அவர்களிடம் கையெழுத்து பெற்ற அன்பர்கள்	8-11—0
சென்னை—1 முரசொலிப் பதிப்பகம் என் கிருஷ்ணன்	2—0—0
ரெட்டியூர் சி. ராசகோபால்	5—0—0
களப்பாடி தி. மு கழகம் டி. சிங்காரவேலு	5—0—0
சென்னை குளோ தி. கி. ராமநாதன்	1—0—0
,, வி. எஸ். சுந்தரம்	1—0—0
,, வி. ஆறுமுகம்	1—0—0
மல்லாங்கிணறு வி. ரத்தின நாடார்	1—0—0
சிங்கப்பூர் ஏ. எம். சிதம்பரம்	4—8—0
,, எம். முத்து	1—8—0
,, என். கே. சிவசாமி	3—0—0
,, வி. கோவிந்தராசு	3—0—0
,, வி. சின்னப்பா	3—0—0
குரும்பூர் மூக்கையா	1—0—0
தூத்துக்குடி அனுதாபி ஒருவர் அன்னு அவர்கள் மூலம்	100—0—0
,, கே. எஸ். சுப்பையா வீரன் பீடி தொழிற்சாலை உரிமையாளர் கே. சுப்பையா	100—0—0
சென்னை குளோ அங்கு மூலம் 100 காசுகள் கொண்ட மாலை	1—9—3
உடுமலைப்பேட்டை ம. இருராமன்	10—0—0
,, ஆர். கோபால்	5—0—0
,, கே. மாணிக்கம்	3—0—0
,, டி. சின்னசாமி செட்டியார்	2—0—0
,, எம். பழனிசாமி	2—0—0
,, ஆர். கனகராசு	2—0—0
,, டி. சத்திவேல்	2—0—0
,, டி. கோவிந்தராசு செட்டியார்	2—0—0
,, டி. சதாசிவம்	2—0—0
,, என். கந்தசாமி	1—0—0
,, ஆர். பஞ்சநாதம்	1—0—0
,, ஏ. சேக்தாவுத்	1—0—0
,, ஆர். நடராசன்	1—0—0
,, சி. திருமலைசாமி	1—0—0
,, எம் மாணிக்கம்	1—0—0
,, எம் கே. காஜாமைதீன்	1—0—0
,, கா. ராமசாமி	1—0—0
,, வேலுசாமி, குப்புசாமி, சுந்தரம், காளியப்பன் ஆகியோர்	2—0—0
நத்தமொழி வ. சு. ரத்தினபாண்டியனார்	1—0—0
,, நடராசன், சிவதாணு, செல்லப்பா, செல்லையா, குமாரசாமி, நெடுஞ்செழியன், செல்லப்பன், தங்கக்கண், தியாகராசன், துரைசாமி, வே. நடராசன், காளிதாஸ், சங்குவர்ணன், ராமசாமி, தங்கமணி, சின்னக்கண், பொன்னம்பலம், சுப்ரமணியம் ஆகியோர்	9—0—0
பாப்பம்பட்டி ஜி. எஸ். பதி, சுப்புசாமி ஆகியோரின் மக்களுக்குப் பெயர் சூட்டலின் நினைவாக	2—0—0
,, தோழர் ஆசைத்தம்பி பேசிய பொதுக்கூட்ட வசூல்	4—8—9
சென்னை—21. சி ராஜேந்திரன்	1—0—0
,, எம். மோகனன்	1—0—0
நாகப்பட்டினம் ஆ. ராமசாமி	5—0—0
,, கா. ஆ. நாராயணசாமி	3—0—0
,, என். பி. திருப்பதிசாமி	2—0—0
,, கே. வி. ராமன்	2—0—0
,, எஸ். எம். தென்னன்	2—0—0
,, பி கணபதி	2—0—0
,, என். ஜி ராசு	1—0—0
,, ஜி பக்கிரிசாமி	1—0—0
,, ஆர். கல்யாணம்	1—0—0
,, பி. கே. சி. மணி	1—0—0
,, யூ குமாரவேலு	1—0—0
,, சிங்காரவேலு	1—0—0
,, எஸ். எஸ். மாணிக்கம்	1—0—0
,, என். வி. குமாரமுத்து	1—0—0
,, பி. பெயாண்டி	1—0—0
,, வி. சௌரிராசு	1—0—0
,, விஜயசங்கர், சிவசங்கரன், கோவிந்தராசு, ஆரோக்கியசாமி, தியாகராசன், ரத்தினசபாபதி, பிச்சை, நடராசன், ராமதாசன், ராமலிங்கம், சால்வதிசாமி, நாராயணி, சிங்காரவடிவேலு, கல்யாணசுந்தரம், கிருஷ்ணமூர்த்தி, ரங்கசாமி, வாசன், முகம்மது உசேன், சீதாபதி, தட்சணாமூர்த்தி, கோபாலன், பக்கிரிசாமி, நாடிமுத்து, முருகேசன், குமாரசாமி, ஜீவரத்தினம், கோவிந்தராசன், பெருமாள் ஆகியோர்	11—4—0
ஆகமொத்தம் ரூ.	7912—1—6

ரஷ்யாவிலிருந்து இலங்கைக்குப் பணம்

பொதுவுடமைக் கட்சி செயலாளருக்கு வருகிறதாம்!

கொழும்பு, டிச. 21—

இலங்கைப் பொதுவுடைமைக் கட்சியின் செயலாளருக்கு ரஷ்யாவிலிருந்து ஸ்விட்சர்லாந்து வழியாக ஏராளமான பணம் அனுப்பப்பட்டிருப்பதாக இலங்கைப் பிரதமர் கொத்தலாவலை நேற்று சனுதரா நகரில் பேசுகையில் குறிப்பிட்டார்.

"இந்நாட்டுக்கு வெளியார் பணம் வருவதைத் தடுக்க நமக்கு அதிகாரமில்லை; என்றாலும், அந்தப் பணத்தைப் பட்டுவாடா செய்யாது நிறுத்திவைக்குமாறு பிரதமர் என்ற முறையில் நிறுத்தி வைத்திருக்கிறேன்."

"நம் நாட்டு மக்கள், அந்நியரின் பணத்தை உபயோகித்து, மனத்தைக் கெடுத்துக்கொண்டு, சுதந்தரத்தை விற்க முயல்வது துரதிர்ஷ்டவசமாகும். இதைத் தடுக்க முயலவேண்டும்."

பிரதமரின் இந்தக் கூற்றை மறுக்க இலங்கை கம்யூனிஸ்டு கட்சி செயலாளர் ஒரு அறிக்கை விடுத்துள்ளார். அறிக்கைக்கு மறுப்பு விடுமாறு கொத்தலாவலையை கம்யூனிஸ்டு கட்சி செயலாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

பர்மா கடன்

நேரு தரும் தகவல்

புதுடில்லி, டிச. 22—

இந்தியாவுக்குப் பர்மா தர வேண்டிய கடன்பற்றி தாம் பர்மியப் பிரதமருடன் கடிதப் போக்குவரத்து நடத்தி வருவதாக பிரதமர் நேரு தெரிவித்துள்ளார்.

1942-ம் ஆண்டுவரை பர்மாவிலிருந்து இந்திய சர்க்காருக்குத் தவணைப் பணம் வந்துகொண்டிருந்ததாகவும், யுத்தக் கஷ்டத்திற்குப்பின் நின்று விட்டதாகவும், அதுபற்றி பேச்சு நடத்த இந்திய அதிகாரி ஒருவர் ரங்கூன் சென்றிருப்பதாகவும் சொன்னார் நேரு.

இது நியாயமா?

பழைய ஆயக்குடி, டிச. 22.

ரயில் நிறுத்தப் போராட்டத்தில், பழைய ஆயக்குடி தி. மு. கழக சார்பில் கலந்துகொண்ட தோழர்கள் ப. சண்முகம், கா. காதர்சா, சி. அன்புப்பழம் ஆகியோருக்கு, பழனி சப்-மாஜிஸ்திரேட் தலா ரூ. 10 அபராதம் விதித்தும், கட்ட மறுத்தால் மூன்று நாள் சிறை தண்டனையும் விதித்தார். தோழர்கள் அபராதம் கட்ட மறுத்து சிறை சென்று மீண்டனர் எனினும் 16-12-53ல், அதிகாரிகள் அபராதத் தொகையை (சிறை தண்டனை அனுபவித்தும்) செலுத்தவேண்டுமென்றும், இல்லையேல் சொத்தைப் பறிமுதல் செய்வோமென்றும் கூறி ஒவ்வொருவரிடமும் பலவந்தமாகத் தலா ரூ. 10 வாங்கிச் சென்று விட்டார்கள்.

சைதை தி. மு. கழகம்

17—12—53ல், தி. மு. கழக உறுப்பினர்கூட்டம் துணைச் செயலாளர் செங்குட்டுவன் தலைமையில் நடைபெற்றபோது, முன்னாள் செயலாளர் தோழர் க. முருகேசன் ராஜினாமா கடிதம் ஏற்கப்பட்டு, தோழர் த. இளங்கோ புதிய செயலாளராகவும், தோழர் பாலன் செயற்குழுவினின்றும் விலகி விட்டமையால் அவருக்கு பதில் தோழர் இரா. முருகேசன் அவர்களை செயற் குழு உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தூத்துக்குடி சதி வழக்கிற்கு நிதி திரட்டி ஜனவரி 20ம் தேதிக்குள் அளிப்பதென முடிவு செய்யப்பட்டது.

அஜ்மீர் சட்ட சபை

காங்கிரஸ் கட்சித் தலைவர் பதவி ஆட்டம் தருகிறது

காங்கிரஸ் பொதுக் குழுவின் 'வைத்தியம்'!

அஜ்மீர், டிச. 20—

அஜ்மீரில் சட்ட சபை காங்கிரஸ் கட்சித் தலைவரான அரியாபு உபாத்தியாவின் மீது அதிருப்தி தெரிவித்து, காங்கிரஸ் மேலிடத்திற்கு, சட்ட சபை உறுப்பினர் சிலர் ஒரு அறிக்கையை அனுப்பியிருப்பதாகத் தெரிகிறது.

இந்தச் சட்ட சபை காங்கிரஸ் கட்சியின் தலைவர்மீது அதிருப்தி தெரிவிக்கும் தீர்மானம் பற்றி விவாதிப்பதற்காக இந்த உறுப்பினர்கள் ஒரு கூட்டம் கூட வேண்டுமென்று கேட்டிருப்பதாகத் தெரிகிறது.

இந் தீர்மானத்தில் கேட்டிருப்பது, ஒரு 'நம்பிக்கையில்லாத் தீர்மானம்' ஆகும், என்றும், ஆகையினால் மேலிடம் இதுபற்றி ஆராய்ந்து வருவதாகவும், கட்சியின் உத்தேசக் கூட்டத்தில் இது பற்றி விவாதிக்கக் கூடாதென்றும், தீர்மானத்தைக் கொண்டு வந்தவர்களிடம் அறிவிக்குமாறு, உபாத்தியாவை, அகில இந்திய காங்கிரஸ் குழுச் செயலாளர் கேட்டுக் கொண்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

இந்து சட்டத் தொகுப்பு மசோதா

நிறைவேற்ற தேதி குறிக்க வேண்டுகோள்

புதுடெல்லி, டிச 20—

இன்று நடைபெற்ற பெண்கள் மாநாட்டில் இந்து சட்டத் தொகுப்பு மசோதாவின் எல்லா சாரத்தையும் சீக்கிரத்தில் சட்டமாக நிறைவேற்றுவதற்கு ஒரு தேதி குறிப்பிட வேண்டுமென ஒரு தீர்மானம் நிறைவேறியது. அதோடு, ஐ. நா. அசெம்பிளி தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட விஜயலட்சுமியாருக்கு பாராட்டுத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

கருணாநிதிக்கு வரவேற்பு

லால்பேட்டை தி. மு. கழக முடிவு

லால்பேட்டை, டிச. 22—

தி. மு. கழக செயற்குழுக் கூட்டம் தோழர் மு தனசிங் தலைமையில் 18—12—53ல், நடைபெற்றது அதுபோது, அடுத்த மாதத்தில் சிறை சென்று மீண்ட தோழர் மு. கருணாநிதிக்கு இவ்வூர் தி மு. கழகச் சார்பில் மாபெரும் வரவேற்பளிக்கவும், தூத்துக்குடி சதி வழக்கிற்கு நிதி சேர்த்து அனுப்பவும் தீர்மானிக்கப்பட்டது

தென்னிந்திய ரயில்வே யூனியன்

திருவண்ணாமலை, டிச. 19—

இவ்வூர் கிளைச் சங்கத்தின் செயற்குழுக் கூட்டம், 14-12-53 அன்று, செயலாளர் இல்லத்தில், தோழர் அய்யாசாமி தலைமையில் நடைபெற்றது. அதுபோது, பெண்மலையில் வீடு வாடகை உயர்வை எதிர்த்து அடையாள வேலை நிறுத்தம் செய்த எல்லாத் தொழிலாளர்களையும் பாராட்டி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது இக் கிளைச் சங்க காரியங்களை கவனிக்கும் பொறுப்பை பல தோழர்களுக்குப் பகிர்ந்து கொடுக்கப்பட்டது.

திருவண்... முன்னேற்றக் கழகத் [illegible] தோழர் இரா. [illegible] [illegible], எம். ஏ., அவர்க[illegible], அறநிலை [illegible] அச்சிடப்பெற்று [illegible] [illegible] செட்டித் தெரு [illegible] வெளியிடப்பெற [illegible]. ஆசிரியர்: இ. என். [illegible]

"ஆலை வேட்டி புடவைகளுக்குத் தடை விதிக்கவேண்டும்"

ஆந்திர கைத்தறி நெசவாளர் காங்கிரஸ் கோரிக்கை

விஜயவாடா, டிச. 20—

ஆந்திர மாநில கைத்தறி நெசவாளர் காங்கிரஸ் செயற்குழுவின் கூட்டம் இன்று நடைபெற்றது.

பட்டினி கிடக்கும் நெசவாளர்களைக் காப்பாற்ற, இறக்குமதியாகும் ஆலை வேட்டிகளுக்கும், சேலைகளுக்கும் ஆந்திர சர்க்கார் உடனடியாகத் தடை விதிக்க வேண்டும் என்ற தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது.

தற்சமயம் விற்பனையாகாமல் கூட்டுறவு நிறுவனங்களில் தேங்கிக் கிடக்கின்ற கைத்தறி யாடைகளை, மொத்த மொத்தமாக வாங்கிக் கொள்வதற்காக கூட்டுறவுத் தலைமைக் கழகத்திற்கு ரூ 25 லட்சம் கடனுகக் கொடுக்க ஆந்திர சர்க்கார் முன்வந்திருப்பதைப் பாராட்டியும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

எவரெஸ்ட் வெற்றி குறித்து ஜான் ஹண்ட் எழுதிய புஸ்தகத்தின் எல்லாப் பிரதிகளும் விற்கப்பட்டுவிட்டன. இது 4 மொழிகளில்மொழிபெயர்க்கப்பட்டது.

'குமார பவனம்'

ஏழைகளுக்கு அன்பளித்தார் குமாரசாமி ராஜா

ராசபாளையம், டிச. 21—

முன்னாள் சென்னை முதலமைச்சர் பி எஸ். குமாரசாமி ராஜா இங்குள்ள 'குமார பவனம்' என்றுள்ள தம் மாளிகையை நகர மக்களுக்கு நன்கொடையாக அளித்தார். கல்வி, கலை, கலாச்சார வளர்ச்சிக்கு இம்மாளிகைபயன்படுத்தப்படும்.

காந்தியார், நேரு, பிரசாத் ஆகியோர் இம்மாளிகைக்கு வந்துபோன நாளில் பொறிக்கப்பட்டுள்ள பளிங்குக் கல் நினைவுப் பட்டயத்தை முன்னாள் முதலமைச்சர் ஓ. பி. ராமசாமி ரெட்டியார் திறந்து வைத்தார்.